

MONTHLY ISSUE

ISSUE 01

# TNVM

MAGAZINE

OCT 2023

WWW.TNVM.CA

## *TALENTS*

### OF OUR COMMUNITY

# CONNECTING HEARTS

## *ONE ISSUE AT A TIME*

MARITIME TAMIL WELFARE ASSOCIATION

SCAN HERE!

தமிழர்கள் நலவாழ்வு மன்றம்

BEGINNING OF THE JOUNEY

## “நல்லாதோர் வீணை செய்து, அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ!” - என்றானே பாரதி!

இந்த கேள்வி யாருக்கானது? பராசக்தியை பார்த்து கேட்டாலும் அது உண்மையில் பரம்பொருளை பார்த்து கேட்டது தானா? யாரை இங்கே நல்லதோர் வீணை என்று சொல்கிறான். தன்னையே தரம் பிரித்து கொள்கிறானா? மேலோட்டமாக பார்த்தால் அது பாரதியை குறிப்பதுபோல் தான் இருக்கிறது. அப்படி என்றால் அவனை யார் புழுதியில் எறிந்தது? உன்மையில் பாரதியைப்போல் செல்வந்தராக பிறந்தவர்கள் அவனைப்போல் வறுமையை தழுவிக்கொண்டவர்கள் யாரும் இருக்க முடியாது. எட்டையபுர அரண்மனையில் அவனுக்கானஅரசுப்பணி காத்திருந்த போதும் அதை ஏற்காமல் தவிர்த்தவன். மதுரையில் ஆசிரியராக பணி புரிந்த போதும் அவன் அதை தன் வாழ்க்கை முழுவதும்தொடரவில்லை. பாரதியை ஒரு கோட்டைக்குள் அடைக்க முடியுமா? அல்ல ஒரு பள்ளி சாலைக்குள் பூட்ட முடியுமா? காட்டாற்றுவெள்ளம் அவன்! தமிழை புதுப்பிற்பதற்காக தமிழே மீண்டும் அவன் உருவில் வந்திருக்க வேண்டும் அல்லவா?



## "யாமறிந்த மொழிகளிலேதமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றானே பாரதி!

இங்கு ஒரு கேள்வி எழுகிறது. பாரதி மட்டும் தான் நல்லதோர் வீணையா, அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது. நம் வீட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் வீணைதான். அதே குழந்தை சிறந்த சமூகத்தில் வளரும் போதும், தன் முழு ஆற்றலையும், அறிவையும் விரும்பிய இலக்கை நோக்கி செலுத்தும் போதும் "நல்லதோர் வீணை" ஆகிறது. அப்படி ஒவ்வொரு குழந்தையும் தான் இலக்கை அடைய" தமிழர்கள் நலவாழ்வு மன்றம்" ஒரு பாலமாக அமைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும்.

# ஆட்ட நாயகன்
# NAVNEETH RAJA



## A Multifaceted Achiever

Navneeth Raja's journey is a true inspiration. He began his remarkable achievements in Chennai, India, and continued his success in Canada. From sports to academics and community involvement, Navneeth's story is a testament to his diverse talents.

*"Success is the result of passion, perseverance, and a commitment to excellence"*




In India, he showed early leadership as the sports captain in 2018. His martial arts skills earned him a black belt in Karate and several tournament victories. Navneeth excelled in two Karate styles and displayed expertise in martial arts weapons. He also shone in Badminton, securing wins at both school and state levels.

- **Martial Arts Mastery: Black Belt in Karate**
- **Badminton Champion: Provincial Badminton Champion in Canada**
- **Multifaceted Achiever: interests in Volleyball, Art, Chess, Dance, and Cooking.**
- **Philanthropic Spirit: Organized A Successful Badminton Tournament Fundraiser, Raising $1000 For Feed Nova Scotia**
- **Academic Excellence: Completed AI Scholars Program for Python**

In Canada, Navneeth became the provincial badminton champion in 2021-2022, solidifying his sporting prowess. He also won men's singles in private tournaments. His versatility extended to varsity volleyball, where he represented Halifax West High School.

# ஆட்ட நாயகன்
# NAVNEETH RAJA



## A Multifaceted Achiever

பூப்பந்து நாயகன் எங்கள் நவநீதன், அவன் தொட்ட இடமெல்லாம் வெற்றிதான். அது மாநிலமோ, தேசமோ வெற்றி எப்போதும் எங்கள் ராஜாவிற்கே. பூப்பந்து போட்டிகளில் "நவநீத் ராஜா" நிகழ்த்திய சாதனைகள் எண்ணற்றவை, அவைகளை பட்டியலிட்டால் இங்கே பக்கம் போதவில்லை.

### மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்



என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறார் நவநீத ராஜா. இவரின் பெற்றோர், இவர் நிகழ்த்திய சாதனைகளை எண்ணி அடைந்த பெருமையும், மகிழ்ச்சியும் தமிழர்கள் நல வாழ்வு மன்றமும் அடைகிறது. இவர் ராஜ நடை பூப்பந்தில் மட்டும் அல்ல , கராத்தே விலும் தனக்கான எல்லையை தொட்டிருக்கிறார். இரு வேறு விளையாட்டுகளில், தேசிய அளவில் உச்சத்தை தொட்டு பார்க்க முடியுமா ? நாங்கள் அறிந்த வரை, Sir Vivian Richards, Former Captain of West Indies Cricket Team தான், கால் பந்திலும், Cricket -லும் ஒரே நேரத்தில் முத்திரையை பதித்தவர். எங்கள் தமிழ் மண் கண்டெடுத்த, நவநீத ராஜா Sir Vivian Richards தொட்ட அந்த உயரத்தை தொடுவார், என்ற பெரும் நம்பிக்கையோடும், அதற்காக, தமிழர்கள் நல வாழ்வு மன்றம் அவரோடு எப்போதும் துணை நிற்கும் என்று உறுதி அளிக்கிறது.

நவநீத ராஜாவின் இந்திய மற்றும் கனடா நாட்டில் நிகழ்த்திய சாதனைகளை எண்ணி தமிழர்கள் நல வாழ்வு மன்றம் பெரும் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறது.

# நீர் அலைகளின் நங்கை
# ADITHI BOOPALAKRISHNAN

Rising Aquatic Star



## *“The Future of Swimming, Made Waves at Just 12!"*



Aditi Boopalakrishnan, a 12-year-old swimming prodigy, showcases raw talent and determination in the pool. She's set records, won medals, and represents her school and nation in national-level competitions, proving that greatness has no age limit.

- ✓ EXCEPTIONAL SWIMMING TALENT
- ✓ NATIONAL-LEVEL CHAMPION
- ✓ SILVER MEDAL - MIDDLE EAST CHAMPIONSHIP

**திறமை வெளிப்படும்போது தன்னம்பிக்கை வளர்கிறது , அதிலும் இளம் வயதில் தன் திறமையை அறிந்து கொள்வது வாழ்க்கையின் திறவுகோலாகும் , அதுவே தவமாகும் போது சாதனையாகிறது, அதீதி பூபாலகிருஷ்ணன் அத்தகைய சாதனைக்கு சொந்தக்காரர். 12 வயதில் நீச்சல் பிரிவில் தேசிய சாதனை என்பது மகத்தான மைல் கல். அவரை "நீர் அலைகளின் நங்கை " என அழைப்பதில் பெரும் உவகை கொள்கிறது**

# "ஆடும் மயிலே" ஆத்யா

# ADHYA PRAVEENKUMAR



"Dreams achieved, records rewritten: Journey to the India Book of Records!"

**பரத முத்திரை பிடிப்பதில் முத்திரை பதித்த ஆத்யா, ஆம் ..பிஞ்சு பாதங்கள் நடப்பதை பார்ப்பதற்கே அழகுதான். அதே பாதங்களும் , விரல்களும் முத்திரை பிடித்து அசைந்து ஆடுவது கொள்ளை அழகு போங்க ! எல்லாவற்றையும் தாண்டி அதை சாதனையாக மாற்றுவது என்பது பேராற்றலும் , விடா முயற்சியும் தான். 7 வயதை நெருங்கும் பிஞ்சு பருவத்தில் , 53 பரத முத்திரைகளை 36 வினாடிகளில் செய்து காண்பித்து India book of Records -ல் இடம் பிடித்துள்ளார். டிசம்பர் மாதம் 26-ம் நாள் , 2020-ம் ஆண்டு இந்த சாதனை நிகழ்த்த பட்டது. ஆத்யா வின் அளப்பரிய இந்த சாதனையை கண்டு தமிழர்கள் நலவாழ்வு மன்றம் பெரும் மகிழ்ச்சி கொள்கிறது.**




Adhya Praveenkumar's remarkable achievement speaks volumes about her talent and dedication. At the age of 6 years, this young dancer from our neighbourhood Halifax, set a unique record of performing 53 Bharatanatyam dance mudras in a remarkable time of just 36 seconds.

# "ஆதிக்"க நாயகன்

# AADHITH KUMARESAN

*"Cycling Through Success: Aadhith's Path to Victory!"*






Aadhith is a dynamic individual currently pursuing degree in Computer Science and Business at Dalhousie University. His early passion for sports led him to become a National level cyclist and a three-time state champion. Aadhith's ability to balance his academic pursuits with his impressive sports career is a testament to his dedication and drive.

- National level cyclist
- 3 times Tamil Nadu state champion
- Sports Authority of India - certified fitness instructor
- Fitness instructor at Dalhousie University
- Undergrad Student at Dalhousie University

சாதனைகள் வாழ்க்கையில் எப்பொழுதாவது நிகழ்வதுண்டு , அதுவும் அவ்வளவு எளிதல்ல! சாதனைகளை நிகழ்த்துவதே தனது வாடிக்கையாக கொண்டுள்ள இந்த "ஆதிக்"க நாயகனை எப்படி போற்றுவது. வார்த்தைகள் போதவில்லை இவர் நிகழ்த்திய சாதனைகளை பட்டியலிட. சைக்கிள் ஓட்டுதல் போட்டிகளின் இவர் கால் தட்டிய இடமெல்லாம் வெற்றி பட்டியல் தான். மாநில அளவிலும் , தேசிய அளவிலும் நிகழ்த்திய சாதனைகள் பத்து!

ஒவ்வொன்றும் தமிழர்களின் சொத்து!! குறிப்பிட்டு சொல்லவேண்டுமென்றால் , தமிழகத்தில் மாநில அளவிற்கான 63rd TN cycling championship 2019 -ல் u/18 வயதிற்குட்பட்டோர் பிரிவில் முதல் இடமும் , இந்திய தேசிய அளவில் maharastra -ல் நடந்த 2018-19 ஆண்டிற்கான 64th SGFI national cycling(road) - போட்டியில் 4-வது இடமும் போற்றத்தக்க வெற்றிகளாகும். "சைக்கிள் ஓட்டுதல்" போட்டிகளில் எண்ணற்ற வெற்றிகளை குவித்த "ஆதித் குமரேசன்" அவர்களை , சாதிக்கவே பிறந்த ஆதிக்க நாயகன் எனபதில் தமிழர்கள் நலவாழ்வு மன்றம் பேரானந்தமும் , பெரும் உவகையும் கொள்கிறது.



# தனுஸ்ரீயின் சதுரங்க வேட்டை

# TANUSRI SRIDHAR

Talent Dynamo




நிஜத்தில் இது ஒரு நேர்மையான சதுரங்க வேட்டை தான், ஆம் இது தனுஸ்ரீ யின் சதுரங்க வேட்டை. தனது 10-ம் வயதில் இருந்து இந்தியாவில் தொடங்கிய இந்த வேட்டை Nova Scotia வரையில் இன்றும் தொடர்கிறது. தனுஸ்ரீயின் சதுரங்க ஆர்வம் இளைமையிலேயே துளிர் விட்டதை அறிந்த பெற்றோரின் பொறுப்பும் கடமையும் இங்கு கவனிக்க தக்கதாகும்., தகுந்த பயிற்சியினை அளித்ததோடு, தனுஸ்ரீயின் ஆர்வத்திற்கு துணை நின்ற அவர்களின் பணியினை தமிழர்கள் நலவாழ்வு மன்றம் போற்றுகின்றது. தன்ஸ்ரீயின் சாதனை படிக்கட்டுகளில் சில இதோ உங்களுக்காக !

*“Checkmating Chess and Spelling Success: Tanusri's Journey of Excellence!!"*

- **A NATIONALLY RANKED CHESS PLAYER WITH A RANKING OF 4TH IN INDIA**
- **SPELLING BEE WHIZ: 2ND PRIZE AT THE PROVINCIAL LEVEL COMPETITION**
- **DIVERSE INTERESTS: ENJOYS SKETCHING, READING, AND PLAYING BADMINTON IN ADDITION TO HER ACADEMIC AND CHESS ACHIEVEMENTS.**

Tanusri, an 11-year-old who moved to Halifax from India in 2022, is a multi-talented young prodigy. In March 2023, she clinched the 1st prize at a Junior chess tournament, showcasing her prowess.
Beyond chess, Tanusri's linguistic skills shone as she secured the 2nd prize at the provincial level spelling bee competition.



# சிங்க பெண்ணே

# JANANI KRISHNAN & APARNA SRIRAM

ஒப்பிலா ஒப்புரவு



தனது செல்வத்தை பொது நோக்கத்திற்காக மக்களுக்கு தருவது "ஒப்புரவு"எனப்படும். ஔவை கூட "ஒப்புரவு ஒழுகு " என்பாள், வளரும்போதே பொது நோக்கத்திற்காக நேரத்தையும் , பணத்தையும் செலவு செய்வது ஒப்புரவு என்றால் , செல்வத்தை தன் கலை வடிவத்தாலும் , உழைப்பினாலும் திரட்டி , அதனை Crohn's and Colitis Canada -க்கு வழங்குவது "ஒப்பில்லா ஒப்புரவு" என்பதில் சந்தேகமில்லை. அதனை திறம்பட செய்த அபர்ணா மற்றும் ஜனனி அவர்களின் அர்ப்பணிப்பு பெருமைக்குரியது. இவர்கள் இருவரும் Microbiology and Immunology and Biochemistry and Molecular Biology- பிரிவில் Dalhousie University. யில் இளங்கலை பயின்று வருகிறார்கள் . பரதம் கற்பதை தனது வாழ்வினில் ஒரு பகுதியாக ஏற்று கொண்டு 13 ஆண்டுகள் பரதம் பயின்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது வரை 4000 CAD திரட்டி Crohn's and Colitis Canada - க்கு வழங்கியுள்ளார். வள்ளுவனின்

## “இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார் கடனறி காட்சி யவர்”

என்ற குறளுக்கு எடுத்து காட்டாக , விளங்கும் எங்கள் சிங்கப்பெண் "அபர்ணா ஸ்ரீராம்" மற்றும் "ஜனனி கிருஷ்ணன் " அவர்களின் பொது நோக்கிற்கான சேவையை தமிழர்கள் நலவாழ்வு மன்றம் எண்ணி பெரு மகிழ்ச்சி கொள்கிறது.

Janani, a dance virtuoso, and co-president of Dalhousie's DADARS, along with her friend Aparna Sridhar have orchestrated a Bharatanatyam performance —a graceful offering of healing artistry. With heartfelt devotion, they channeled their art into a fundraiser, a lyrical raindance, supporting Crohn's and Colitis Canada on a journey of hope and compassion.



# வெல்லத்தானே வீரம்

# KRISH BOJARAJAN

Taekwondo Warrior






தமிழகம் கண்டெடுத்த மாமல்லன் "க்ரிஷ்" -ன் Taekwondo -வில் நிகழ்த்திய சாதனைகளை கொண்டாடுவதில் "தமிழர்கள் நலவாழ்வு மன்றம்" பெரு மகிழ்ச்சியோடு , பெருமையும் கொள்கிறது. இன்னும் பல சாதனைகளை புரிய அவரோடு எப்போதும் துணை நிற்கும் என்ற உறுதியும் அளிக்கிறது.

**“கடாரம் கொண்டான் மாமன்னன் இராசேந்திரன் அன்று , தாய்லாந்து வரை சென்று பதக்கம் வென்றான் எங்கள் "க்ரிஷ்" இன்று.**

**பத்து பாட்டும் எட்டு தொகையும் சொல்லிக்கொடுத்த எங்கள் வீரம்.**
**செத்து பிறப்பினும் போர்வாளில் தொட்டு வைத்தே புதைப்பர்**
**எட்டு திக்கும் வென்ற போதும் யாரையும் கொன்றதில்லை தமிழர் வீரம்**
**பகைமையை விட்டு விட்டு, வெல்லத்தானே வீரம்! வெல்லத்தானே வீரம்!**

Krish's Taekwondo journey began at age 7, evolving from a hobby into a remarkable sports career. Notably, he won gold at the Tamil Nadu North Zone Taekwondo Championship, silver at the state level, and bronze at the Heroes International Taekwondo Championship in Thailand. He also holds a record in the India Book of World Records for 30 minutes of continuous punches and kicks. Gratitude goes to Master Sumit Kumar Sahoo for guiding Krish's path.

